1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 68, திரு தா. வேடியப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

68—

திருவண்ணாமலையில் புதிதாக போக்குவரத்துக் கழகம்.

*11748—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலையில் புதியதாகப் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:,

இல்லை.

முற்பகல் 10–05

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை என்றாலே தீபச் சுடர் ஏற்றும் ஒரு புனிதத் தலமாகும். ஆனால் இன்றைய நிலையில் தமிழகம் என்றாலே நம்முடைய ஒளி விளக்காம் புரட்சித் தலைவி அவர்கள் அவர்களுடைய புனித ஆட்சியில் எங்களுடைய பிற்படுத்தப் பட்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தின் தலைநகரமான திருவண்ணாமலையில் ஒரு போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த அரசு மறு பரிசீலனை பண்ணுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆகிய இரண்டையும் ஒன்றாக இணைத்து மூன்று போக்குவரத்துக் கழகங்களாக இன்றைக்கு நாம் பிரித்திருக்கின்றோம் அதிலே கொஞ்சம் பேருந்துகள், இதிலே குறிப்பிட்ட பேருந்துகளை எடுத்து, காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த மண்ணில், மாண்புமிகு நம்முடைய மறைந்த முதல்வர் புரட்சித் தலைவருடைய பெயரால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் போக்குவரத்துக் கழகத்தை 10 மாத காலத்திலே உருவாக்கியதன் வாயிலாக புதிய போக்குவரத்துக் கழகத்தை அந்தப்பகுதியில் உருவாக்குவதற்கு வாய்ப்பில்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ள அந்தப் போக்குவரத்துக் கழகத்தை எங்களுடைய பிற்படுத்தப்பட்ட மாவட்டமான திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தை யும் உள்ளடக்கி, நான்காவதாகப் பிரித்து மேலும் ஒரு போக்கு வரத்துக் கழகத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாபிராமன் குழுவினுடைய பரிந்துரை 350லிருந்து 600 பேருந்துகள் வரை இருந்தால் ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பிக்கலாம் என்ற ஒரு பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதே போன்று தில்லைநாயகம் உயர் மட்டக் குழு 750 பேருந்துலிருந்து 1,200 பேருந்துகள் வரை இருந்தால் அதைப் பிரிக்கலாம் என்ற பரிந்துரையை செய்திருக் கின்றார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் போக்குவரத்துக் கழகத்தில், பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் 680 பேருந்துகள் தான் இருக்கின்றன. அதேபோன்று இங்கே மற்றுமிருக்கின்ற புரட்சித் தலைவருடைய பெயரால் உருவாக்கப்பட்டிருக்கின்ற அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் 662 பேருந்துகளை இப் போது இயக்கிக்கொண்டிருக்கிறோம். தந்தை பெரியாருடைய போக்குவரத்துக் கழகத்தில் 782 பேருந்துகள் இருக்கின்ற காரணத்தினால் இப்போது அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 69, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

69—

இராசிபுரம் தொகுதியில் கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றல்.

*9652—திருமதி க. பழனியம்மாள்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் தொகுதியில் நடப்பாண்டில் எத்தனை கைத்தறிகள் விசைத்தறிகளாக மாற்றப்பட உள்ளது ?

(ஆ) எத்தனை நெசவாளர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கப்பட உள்ளது ?